'கிளீன் கட்'
நவ நாகரிகத்திற்கேற்ப
பெண்கள்
குழந்தைகளுக்கான
உடைகள் குறுகிய
காலத்தில் தைத்துக்
கொடுக்கப்படும்.
'KLEEN KHUT'
239, Power House Road,
JAFFNA.
Tele: 22823

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

'KLEEN KHUT'
* தரமான ரோனியோ பிரதிகள்
* தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள்.
* விரைவான தமிழ், ஆங்கில சட்டெழுத்து வேலைகளுக்கு
நாடுங்கள்:
'கிளீன் கட்'
239, மின்சார நிலைய வீதி,
யாழ் நகர்,
தொலைபேசி: 22823

ஏடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு கார்த்திகை மீ" 18உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 20 (03-12-1985) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:- 7

★ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு:

# இலங்கை அரசு ஐ. நாவுக்கு பதில் சொல்லியாக வேண்டும்

## சபையில் லக்ஷ்மன் வலியுறுத்து

## சிங்கள மக்கள் யுத்தத்திற்கு தயார் இல்லை என்கிறார் அவர்

கொழும்பு, டிச. 3,

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அந்தக் குற்றச் சாட்டுகளுக்கு இலங்கை ஐக்கிய நாடுகள் சபைக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

யுத்தப் பிரகடனம் செய்ய வேண்டும் என்பன போன்ற அறிக்கைகள் விடுக்கப்படுகின்றன. உண்மையில் சிங்கள மக்கள் யுத்தத்துக்குத் தயாராக இருக்கிறார்களா? இல்லவே இல்லை.

அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு அவர் பேசியபோது மேலும் கூறியதாவது:

[illegible] செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில், இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சில யோசனைகளைத் தெரிவித்தார்.

இந்த யோசனைகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் ஆகியவை முன்வைத்த யோசனைகளிலிருந்து வேறுபட்டவை அல்ல.

அரசாங்க எம். பி. ஒருவர் இவ்வாறு முன்வைத்த யோசனைகளை வெளிநாடுகள் கவனத்தில் எடுக்கலாம். வெளிநாட்டமைச்சின் நிலைப்பாட்டை காலி எம். பி. அறிவாரா என்பது தெரியாது.

தற்போது யுத்தப் பிரகடனம் செய்வது போன்று அறிக்கைகள் விடுக்கப்படுகின்றன

(4-ம் பக்கம் பார்க்க)

## ஈழம் தேசிய விடுதலை முன்னணி தலைவர்கள்

### எம்- ஜி. ஆருடன் சந்திப்பு

சென்னை, டிச. 3

ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் திங்கள் பகல் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்தனர்.

இலங்கை இனப்பிரச்சினை பற்றி முதலமைச்சரிடம், முன்னணித் தலைவர்கள் எடுத்துக்கூறினர். அரை மணி நேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இனப்பிரச்சினையில் அக்கறை காட்டும் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

## தாழ்வு அமுக்கம் இலங்கை மேல்

யாழ்ப்பாணம், டிச 3

தாழ்வு அமுக்கம் இலங்கையின் மேல் மையம் கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

கடலில் இருந்து 7000 அடி உயரத்திற்கு மேல் காற்று சுழற்சி இருந்ததாகவும் சென்னை வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

முச்சந்தி முரளி



ஓமோம்! எதிர்த்தரப்பில இருக்கேக்க பிறக்கிற ஞானம் அரசாங்கத் தரப்புக்குப் போனதும் மறந்து போறது இந்த நாட்டு அரசியல்வாதிகளுக்குக் கை வந்த கலை. அதாலை இவர் ஏதோ பரிந்து பேசினார் எண்டு நினையாதையுங்கோ!

சரக்குரயில் தடம்புரண்டது

## யாழ், கொழும்பு ரயில்கள் தாமதம்

யாழ்ப்பாணம், டிச 3

கொழும்பில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் நேற்று திங்கட்கிழமை ரயில்கள் தாமதமாகவே புறப்பட்டன. இரண்டு சரக்கு ரயில் வண்டிகள் தடம்புரண்டதே இதற்குக் காரணமாகும்.

இதுபற்றிய விவரமாவது: திங்கள் காலை அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சரக்கு ரயில், மாங்குளத்திற்கு அருகில் தடம்புரண்டது.

இதன் காரணமாக காங்கேசன் துறையில் இருந்து காலை 8,05க்கு புறப்படவேண்டிய யாழ் தேவி, காலை 11.45 மணிக்கே புறப்பட்டது.

கொழும்பில் இருந்து

4-ம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் மீண்டும் சிறை உடைப்பு முயற்சி

மட்டக்களப்பு, டிச.3

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று திங்கட்கிழமை காலை இனந்தெரியாத நபர்கள் மெஷின் துப்பாக்கிகள், பிஸ்டல்கள், கைத்துப்பாக்கிகளுடன் நுழைய முயன்றனர்.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இது பற்றி கூறப்படுவதாவது:

ஆயுதங்களுடன் நுழைந்த இந்த நபர்கள் காவலாளியை மிரட்டி பிரதான வாயிலுக்கு வந்துவிட்டனர். கதவைத்தட்டி சிறையினுள் நுழைய அவர்கள் முயன்றனர்.

அச்சமயம் சிறைக்காவலர்கள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். அபாயச் சங்கை ஒலித்தனர்.

இதைத் தொடர்ந்து அந்த நபர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

மட்டக்களப்புச் சிறைச்சாலை மூன்று தடவை உடைக்கப்பட்டது.

கடந்த மாதமும் இச் சிறையை உடைக்க முயற்சிக்கப்பட்டது.

இச் சிறைச்சாலையை எதற்கு இப்படி முற்றுகையிடுகிறார்களோ தெரியவில்லை-இப்படி சிறைச்சாலை அதிகாரி உதயன் செய்தியாளரிடம் சொன்னார்.

# எப்போதும் வெற்றி எமக்கே; இப்போதும் அதில் மாற்றமில்லை

## லலித் இறுமாப்பு!

கொழும்பு, டிச. 3

2500 வருடங்களாக இலங்கையின் சுதந்திரத்தையும் இறைமையையும் பேணிப் பாதுகாத்த பாரம்பரியத்தை உடையவர்கள் நாங்கள். எப்போதும் நாம் வெற்றியே கண்டு வந்துள்ளோம். இந்த வெற்றிப் பாதையில் எந்தவித மாற்றமும் இருக்கப் போவதில்லை.

இவ்வாறு இறுமாப்புப் பேசினார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடி மரணமான வீரர்கள் சாந்தியடையவும் போராடும் வீரர்களுக்கு அருள் வழங்கவும் மீரிகம பகுதி விகாரை ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்ட பூசை ஒன்றில் கலந்து கொண்டு அமைச்சர் உரையாற்றினார். அப்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாதப் பிரச்சினையை சமாதானம் மூலம் தீர்க்கவே நாம் விரும்புகின்றோம்.

பயங்கரவாதிகள் இராணுவத் தீர்வை விரும்பினால் நாமும் அதற்கு ஆயத்தமாவோம்.

அப்படி ஒரு பாதையை நாம் தெரிந்தெடுத்தால் எம்மை எவருமே தடுத்து நிறுத்த முடியாது. பயங்கரவாதிகள் மிகப் பெரிய தவறு ஒன்று செய்கின்றனர். எமது ஆயுதப்படையினரின் உயர்ந்த நோக்கத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பணத்திற்காகவும் சலுகைக்காகவும் நமது படை வீரர்கள் போராடுகிறார்கள் என அவர்கள் நினைக்கிறார்கள்.

நான் இந்த வைபவத்திற்கு வரமுன் இராணுவ ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்த வீரர்களை பார்வையிட்டேன். அந்நிலையில் அவர்களைப் பார்த்து பேசுவது மனதிற்கு வேதனையாக இருக்குமென நினைத்தேன்.

ஆனால் துன்பத்தின் மத்தியிலும் அவர்கள் தளராது உறுதியாக இருக்கிறார்கள்.

மீண்டும் தாம் கடமை புரியும் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும் எனக் கூறுகிறார்கள்.

வடக்கு, கிழக்கில் எங்கு வேண்டுமானாலும் செல்லத் தயார் என அவர்கள் உறுதியளித்தார்கள்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## கல்லடியில் இறந்த ஆறு பேரில் ஐவர்

### அடையாளம் காணப்பட்டனர்

மட்டக்களப்பு, டிச.3

கல்லடியில் ஞாயிற்றுக்கிழமை காலை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஆறு தமிழர்களில் ஐவர் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணைகள் நடைபெறவில்லை.

பிரேத பரிசோதனைகள் மட்டுமே நடந்தன. சட்டவைத்திய அதிகாரி டாக்டர். சி. பஞ்சலிங்கம் இதனை நடத்தினார்.

அடையாளம் காணப்பட்ட ஐந்து பேரின் விபரங்கள் வருமாறு;

1. டாக்டர். கந்தப்பன் ஜீவானந்தன். மறு பெயர் ரகுபதி வயது 40. 3 குழந்தைகளின் தந்தை—கல்லடி வாசி
2. வீரகுலசிங்கம் ஞானநாயகம் வயது 28. விசேஷ சேவை அலுவலர்—பெரியகல்லாறு வாசி.
3. பிள்ளையான் தம்பி கந்தசாமி வயது 30. ஆறு குழந்தைகளின் தந்தை -சென்ரல் காம்ப் வாசி
4. வேலாயுத ப்பிள்ளை பொன்னுத் துரை

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். ரயில் பயணிகளுக்கு துரையப்பா அரங்கில் டிக்கட்

## நாளை முதல் புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். ரயில் நிலையத்துக்கு வரும் பிரயாணிகள் துரையப்பா விளையாட்டு அரங்கில் பணத்தைக் கொடுத்து பயணச் சீட்டுக்களைப் பெறலாம்.

காங்கேசன்துறை, சுன்னாகம், கொடிகாமம் ரயில் பிரயாணிகள் கொழும்பில் மாற்றக்கூடிய தான காசுக்கட்டளைகளைக் கொடுத்து பயணச் சீட்டுக்களைப் பெறலாம்.

இப்புதிய திட்டம் புதன்கிழமை (4-12-85) முதல் நடைமுறைக்கு வரும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

காசுக் கட்டளைகள், பிரதம கணக்காளரின் பெயருக்கு எடுக்கப்பட வேண்டும். கொழும்பில் மாற்றப்படக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

காசுக்கட்டளைகளைக் கொடுத்தவுடன் அந்தந்த ரயில் நிலையங்கள் பயணச் சீட்டுக்களை வழங்கும்.

ரயில்வே வாரண்டுகளுக்கான பயணச் சீட்டுக்கள் வழமைபோன்று ரயில் நிலையங்களில் வழங்கப்படும்.

14 தினங்கள் செல்லுபடியாகக்கூடிய சலுகை பயணச் சீட்டுக்கள் அநுராதபுரம், மாஹோ, மருதானை, கோட்டை ரயில் நிலையங்களில் மட்டும் கிடைக்கும்.

## முத்திரை தட்டுப்பாடு மேலும் மோசம்

பருத்தித்துறை, டிச. 3

புதிய தபால் கட்டணம் நேற்று முன்தினம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து யாழ்நகரில் முத்திரைகளுக்கு மேலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முதலாம் திகதி முதல் சாதாரண தபால் முத்திரை 75 சதமாக கட்டணம் அதிகரிக்கப்பட்டது தெரிந்ததே.

நகர எல்லைக்குள் உள்ள உப தபால் நிலையங்களில் 75 சத முத்திரையைக் கேட்டால் இல்லை என்ற பதிலே வருகிறது. 75 சதத்துக்குச் சமமான சிறிய தொகை முத்திரைகளைக் கேட்டால் அதற்கும் இல்லை என்ற பதிலே வருகிறது.

## மலத்தியன் களஞ்சிய தீவிபத்துக்குக்காரணம்

### நாசவேலை என்கிறது அமைச்சு

யாழ்ப்பாணம், டிச.3

முல்லேரியா, மலேரியா தடுப்பு பகுதி களஞ்சியத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து விசாரணை செய்த சுகாதார அமைச்சு தீ விபத்துக்கு நாசவேலையே காரணமென தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது;

ஞாயிறு இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 30 கிலோ கொண்ட 15 ஆயிரம் பொதியில் 500 பொதிகள் மாத்திரமே காப்பாற்றப்பட்டன. அங்கு தினமும் மின்சார ஊழியர்கள் கடமை புரிவதால் மின்சாரக்கோளாறு ஏற்பட்டு விபத்து ஏற்படும் சாத்தியம் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு சதிவேலையே என அமைச்சு விடுத்த அறிக்கையில் மேலும் அறியப்படுகின்றது.

## சுபநேரம்

செவ்வாய்க்கிழமை

3 - 12 - 1985

சுபநேரம்:
10.45 முதல் 12.15 வரை

ராகுகாலம்:
3.15 முதல் 4.45 வரை

## இராணுவ வீரரிடம் வழிப்பறி

யாழ்ப்பாணம், டிச.3

பலாலி கொடை இராணுவ முகாமைச் சேர்ந்த வீரர் ஒருவரின் உடைமைகளை வழிப்பறிக்கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றனர்.

இது பற்றி மேலும் கூறப்படுவதாவது:- சில தினங்களுக்கு முன் பலாலி கொடை இராணுவ முகாமுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார் பிரஸ்தாப இராணுவ வீரர்.

இனந்தெரியாதவர்கள் மூவர் வழிமறித்து சவரக் கத்தியினால் அவரை வெட்டி காயப்படுத்தினர்.

அவரிடமிருந்த பணம், கடிகாரம் மற்றும் உடைமைகளை அவர்கள் அபகரித்துச் சென்றனர்.

இது பற்றி இராணுவ வீரர் ஹோமாகம பொலீஸில் புகார் செய்துள்ளார்.

## மூதூர் அகதிகள்

# வெளியேற மறுத்தால் உதவி கிடையாதாம்

சீனன்குடா, டிச. 3

மூதூரில் இருந்து வெளியேற மறுக்கும் தமிழ் அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படக்கூடாது என்று உத்தரவிடப்பட்டு உள்ளது.

அதிகரித்து வரும் வன்செயல்கள் காரணமாக மூதூர்த் தொகுதியில் உள்ள தமிழ்க் கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அங்கு வாழும் சகல தமிழ் மக்களுமே அகதிகள் நிலைக்குத் தள்ளப்பட்டு அகதி முகாம்களில் தங்கி உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 16,000 அளவில் இருக்கும் என்று மதிப்பிடப்படுகின்றது.

ஐந்து முகாம்களில் இவர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களை மூதூரில் இருந்து வெளியேற்றி திருகோணமலை நகரில் முகாம்களில் குடியமர்த்த அரசு வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்தன.

பெரும்பாலான அகதிகள் இந்த நடவடிக்கையை ஆதரிக்கவில்லை.

தங்கள் கிராமங்களிலேயே இருக்க அவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால் அரசு அதிகாரிகள் திருமலைக்குச் செல்லும்படி நெருக்கினார்கள்.

18-11-85இல் இந்த அகதிகள் மூதூரில் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

'எங்களைத் திருமலைக்கு அனுப்பவேண்டாம்' என்று அவர்கள் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பித்தனர்.

மகஜருக்குப் பதிலாக திருமலை அரசாங்க அதிபர் மூதூர் உதவி அரசாங்க அதிபருக்கு 28-11-85 திகதியிடப்பட்டு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

'திருமலைக்குச் செல்ல மறுக்கும் மூதூர் அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதை உடனடியாக நிறுத்தவும். 18-11-85இல் அகதிகள் சமர்ப்பித்த கோரிக்கைகள் பற்றி இணைப்பு அதிகாரி பதில் தரும்வரை இந்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படக் கூடாது' என்று அரசாங்க அதிபர் தனது கடிதத்தில் உத்தரவிட்டிருக்கின்றார்.

இதைத் தொடர்ந்து, வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவிகளை உடனடியாக நிறுத்தும்படி மூதூர் உதவி அரசாங்க அதிபர் தனது பிரிவில் உள்ள சம்பூர், கட்டைப்பறிச்சான், சேனையூர் கிராமசேவையாளர்களைப் பணித்துள்ளார்.

வித்தாரம் மூன்றும் பக்கத்தில்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## போபால் விஷ வாயு ஒழுக்கு: சீக்கிய தீவிரவாதிகள் காரணம்?

வாஷிங்டன், டிச. 2.

போபால் விஷ வாயு ஒழுக்குக்கு காரணம் சீக்கியத் தீவிரவாதிகள் குழு ஒன்றே: இப்படி போபால் யூனியன் கார்பைட் நிறுவனத்தின் அமெரிக்க உரிமையாளர்கள் கருதுகின்றனர்கள்.

அமெரிக்காவின் 'வால்ஸ்ரீட் ஜேர்னல்' என்ற பிரபல சஞ்சிகையில் மேற்கண்ட செய்தி வெளியாகி உள்ளது.

சீக்கிய தீவிரவாதிகள் அமைப்புத்தான் காரணம் என்பதற்கு நேரடிச் சாட்சியங்கள் எதுவும் இல்லை என்றும் அப் பத்திரிகை கூறுகின்றது.

1984 டிசம்பரில் போபால் சம்பவம் இடம்பெற்றது. 2500 பேர் வரையில் இறந்தனர்.

ஒரு ஆண்டுக்குப் பின்னரே இப் புதுக் கருத்து வெளியாகியுள்ளது.

## பிரபுவின் உயர்ச்சிக்கு காரணம் சிவாஜியா?

"பிரபு அதிகமான படங்களில் நடிப்பதற்குத் தந்தை சிவாஜியின் சிபார்சே காரணம்" என்று திரையுலகில் பரவலாகப் பேசப்படுவது குறித்து பிரபு விளக்கம் அளித்துள்ளார்.

அவர் கூறியிருப்பதாவது:-

"எனது அப்பாவுடன் இணைந்து 18 படங்களில் நடித்துள்ளேன். அந்தப் படங்களில் எனக்கு பொருத்தமான "கேரக்டர்கள்" இருந்ததால் தான் என்னை அழைத்தார்கள்: வலுவில் திணிக்கவில்லை.

### தினசரி சினிமா

அப்பா சிபார்சு செய்தது உண்மை என்றால், கடந்த சில மாதங்களில் எனக்குச் சரியான முறையில் படங்கள் அமையாத போது அவர் சிபார்சு செய்து பல படங்களை எனக்கு வாங்கிக் கொடுத்திருக்கலாமே?

எங்களது பேனரிலேயே (சிவாஜி புரொடக்ஷன்ஸ்) தொடர்ச்சியாக என்னை வைத்து படங்களை தயாரித்திருக்கலாமே?

நான் நடிக்க ஆரம்பித்ததில் இருந்தே அவர் "நீயே முயற்சி செய்து உன் திறமையினால் முன்னுக்கு வா... சொந்தக் காலில் நிற்கக்கற்றுக்கொள்" என்று சொல்லித் தான் நடிக்க அனுமதி தந்தார்.

அப்பா விரும்பி இருந்தால் எத்தனையோ தயாரிப்பாளர்களிடம் சொல்லி எனக்குப் பல வாய்ப்புக்களை பெற்றும் கொடுத்திருக்க முடியும். அதை அவர் விரும்பவில்லை.

நானும் சொந்த முயற்சியினால் முன்னுக்கு வர வேண்டும் என்ற உறுதியில், அதில் நம்பிக்கை வைக்கவில்லை".

இப்படிக் கூறினார் பிரபு.

### ஹொலிவூட் ஒளிப்பதிவாளர்!

பிரபல டைரக்டர் முக்தா சீனிவாசனின் மகன் முக்தா சுந்தர் இவர் ஹொலிவூட்டில் ஒளிப்பதிவுத் துறையில் விசேஷ பயிற்சி பெற்று வந்துள்ளார்.

இவர் ஹொலிவூட்டில் பெற்ற பயிற்சியின் புதிய உத்திகள் வெகு விரைவில் வெள்ளித் திரையில் பளிச்சிடப் போகிறது.

## ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதம்

# பாகிஸ்தான் கையாடல்

## 'டைம்ஸ்' சஞ்சிகை சாடுகிறது

வாஷிங்டன், டிச. 2

ஆப்கானிஸ்தான் கெரில்லாக்களுக்கென்று அமெரிக்காவால் வழங்கப்படும் ஆயுதங்கள் அவர்களிடம் நேரடியாகச் சென்றடைவதில்லை என 'டைம்ஸ்' சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தான் இந்த ஆயுத உதவிகளைத் தனது இராணுவ தேவைக்குப் பயன்படுத்துகிறது அல்லது விற்பனை செய்கிறது எனவும் மேலும் அது குற்றம் சாட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ரஷ்ய ஆதிக்கத்தை முறியடிப்பதற்கென்றே இந்த உதவிகள் வழங்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் ஆப்கானிஸ்தானின் இந்த ஆண்டுச் செலவினங்களுக்காக 47 கோடி டாலர்களை ஒதுக்கியுள்ளது.

## விமானத்தைக் கடத்திய இளைஞன் எகிப்திடம் ஒப்படைப்பு

### செய்திக்கு மோல்டா மறுப்பு

வலெட்டா, டிச. 2

விமானக் கடத்தலை மேற்கொண்ட இளைஞனைத் தன்னிடம் ஒப்படைக்க மோல்டா இணங்கியுள்ளது என்னும் எகிப்தின் கூற்றை மோல்டா அரசு மறுத்துள்ளது.

கடந்தவாரம் எகிப்திய கொமாண்டோக்களினால் விமானம் தகர்க்கப்பட்டபோது 59 பிரயாணிகள் இதில் உயிரிழந்தனர்.

கடத்தல்காரர்களில் உயிர்தப்பியுள்ள இளைஞன் ஓமர் மாரூக்கி (வயது 20) இப்பொழுது மோல்டா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் இந்த இளைஞனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு எகிப்து கேட்டுக்கொண்டிருக்கிறது.

எகிப்திடம் இந்த இளைஞனை ஒப்படைப்பது தொடர்பாக எந்த வகைப் பேச்சுவார்த்தையும் தமக்கிடையில் நிகழவில்லையென மோல்டா அரசுப் பேச்சாளர் போல் மிஸ்பட் தெரிவித்தார்.

எனினும் எகிப்து இந்த இளைஞனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டிருந்தது என்னும் விடயத்தை அவர் ஏற்றுக் கொண்டார்.

## நீச்சல் உடையில் இந்துப் பெண் கடவுள்

### புத்தர் இமயமலை ஏறுகிறார்

### இப்படி விளம்பரப் படங்கள்

மியூனிச், டிச. 2,

நீச்சல் உடையில் இந்துமதப் பெண் கடவுள்! இமயமலை ஏறுபவராக புத்த பெருமான்!!

இப்படியான படங்களுடன் மேற்கு ஜெர்மனி பிரயாண நிறுவனம் ஒன்று விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

இந்த நிறுவனம் உல்லாசப் பிரயாணிகளை இந்தியாவில் கோவாவிற்கும் நேபாளத்திற்கும் அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபடுகின்றது. அது சம்பந்தமான பிரசார விளம்பரங்களில்தான் நீச்சல் உடையில் இந்துப் பெண் கடவுளும் மலை ஏறுபவராக புத்த பெருமானும் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.

இவ் விளம்பரங்கள் மேற்கு ஜெர்மன் நாளிதழ்களில் வெளிவந்தன.

இன எதிர்ப்புக் குழு ஒன்று இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கிறிஸ்து பெருமானையும், கன்னி மரியாளையும் ஏனைய மதத்தினர் இப்படி இது போன்று பயன்படுத்தினால் கிறிஸ்தவ மக்களுக்கு எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து பாருங்கள்!'—

இப்படி அந்த இனவாத எதிர்ப்புக் குழு கேட்டுள்ளது.

## பாஸ்போர்ட் மோசடிக்கு கடும் தண்டனை

பஹ்ரைன், டிச 2

பாஸ்போர்ட் மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குடியரசு கடும் தண்டனை வழங்கத் தீர்மானித்து உள்ளது.

குற்றவாளிகளாகக் காணப்படுவோர் 10 வருட சிறைத் தண்டனை பெறுவர்.

முன்னர் 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## கங்கையை புனிதப்படுத்த

### நெதர்லாந்து உதவி

புதுடில்லி, டிச. 2

இந்தியாவில் கங்கையைப் புனிதப்படுத்தும் பணிக்கு நெதர்லாந்து அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது.

டச்சு நிறுவனம் ஒன்று இப்பணியில் ஈடுபட உள்ளது.

இந்தியாவில் உள்ள நெதர்லாந்து தூதுக்குழு இது சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றது.

## விமான கடத்தல் முற்றுப்புள்ளி

கெய்ரோ டிச.2

நடந்து முடிந்த விமானத் தகர்ப்புச் சம்பவம், நடக்கப் போகும் விமானக்கடத்தல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

இப்படி எகிப்திய ஜனாதிபதியின் முக்கிய உதவியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## பங்களாதேஷில் கொலரா

டாக்கா டிச. 2

பங்களாதேஷில் கொலரா நோய் பரவத் தொடங்கி உள்ளது.

தென்பகுதி கரையோர மக்கள் வாழும் பிரதேசங்களில் இந்த நோய் பரவுவதாக அறிவிக்கப்பட்டது.

அசுத்த தண்ணீர், பழுதடைந்த உணவுகளைக் கிராமவாசிகள் உண்டதே இதற்குக் காரணமாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## கிராமம் வளர்ச்சி அடைய நாடும் வளரும்

### காரைநகர் திறப்பு விழாவில் உரை

காரைநகர், டிச. 3

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவை. கிராமங்கள் வளர்ச்சியடையும் போதுதான் நாடும் வளர்ச்சியடைய முடிகிறது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வி. சாந்தி சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

காரைநகர் மொந்திபுலம் - இடைப்பிட்டி, கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்பு விழாவிலும் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலும் பிரதம அதிதியாக அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

திரு. க. கனகசபை தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற இவ் வைபவத்தில் செல்வி. சாந்தி சுப்பிரமணியம் தொடர்ந்து கூறியதாவது:

"உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களையும், பணவளத்தையும் பயன்படுத்தி கிராமச் சூழலுக்கு ஏற்ற வகையில் மிக அழகாக இக்கட்டடத்தை அமைத்துள்ளார்கள்.

இவர்களைப் பின்பற்றி ஏனைய கிராம அபிவிருத்திச் சங்கங்களும் அரசாங்க உதவியை எதிர்பாராது தாமே தமது கட்டடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்வரவேண்டும்.

பொதுமக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வசதியாக கிராம அபிவிருத்திச் சங்கங்களில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து அச்சங்கங்களினூடாகத் தமது குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினால் விரைவில் பயன் கிடைத்துவிடும்."

இப்படி அவர் கூறினார்.

காரைநகர் கிழக்கு விசேஷ சேவை அலுவலகர் திரு. எஸ். கே. சிவலிங்கம், கிராமசேவை அலுவலகர் திரு. கே. தில்லைநாதன், திரு. சோ. விக்கினேஸ்வரன், செல்வி. க. ராஜலட்சுமி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். செயலாளர் திரு. ந. கணேசமூர்த்தி நன்றி கூறினார்.

## டாக்கா உச்சிமாநாடு தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள்

டாக்கா, டிச. 2

டாக்கா உச்சிமாநாட்டுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

25,000 பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வேலைகளில் பயன்படுத்தப்படுவர்.

டாக்கா மாநாடு எதிர்வரும் 7 இல் ஆரம்பமாகின்றது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவர்.

## காங்கிரஸ் பிரமுகர்கள் விபத்தில் மரணம்

சென்னை. டிச 2

திருச்சிக்கு அருகில் நடந்த விபத்து ஒன்றில் மாவட்ட காங்கிரஸ் பிரமுகர்கள் இரண்டு பேர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

மொத்தம் இறந்தவர்களின் எண்ணிக்கை 3.

இவர்கள் அனைவரும் ஜீப் ஒன்றில் பிரயாணம் செய்துள்ளனர்.

திருவள்ளுவர் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் ஜீப் மோதியது.

இறந்தவர்களில் ஒருவரான பி. என். தண்டபாணி மாவட்ட காங்கிரஸ் தலைவர்.

## தி.மு.க.வுக்கு ஜனதா ஆதரவு

சென்னை, டிச. 2

செய்யாறு இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரை ஜனதாக் கட்சி ஆதரிக்கும்.

ஜனதாக் கட்சி தமிழ்நாடு தலைவர் இரா. செழியன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

செய்யாறு சட்டசபைத் தொகுதி உறுப்பினர் பதவி காலியாக உள்ளது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகவேட்பாளரும்இத் தொகுதியில் போட்டியிடுகின்றார்.

## கைதான இளைஞர் மனநோயாளி

கிளிநொச்சி, டிச, 3

கடந்த 28ம் திகதி முரசுமோட்டைப் பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு ஆனையிறவு தடைமுகாமுக்கு கொண்டுசெல்லப்பட்ட இளைஞன் எம். ஸ்ரீவன் ஒருமன நோயாளி எனத் தெரியவந்துள்ளது.

பரந்தன் நவஜீவன நிர்வாகிகளினதும் கிளிநொச்சி பிரஜைகள் குழுவினதும் முயற்சியால் இந்த இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

## லொறி கடத்தல்

யாழ்ப்பாணம், டிச. 3

குருநாகலிலிருந்து மன்னாருக்கு கருவாடு ஏற்றச் சென்ற லொறி கடத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை குருநாகலிலிருந்து மன்னாருக்கு லொறி சென்றுகொண்டிருந்தது. தார்ப்புரத்திற்கு அண்மையில் இனம் தெரியாதவர்கள் துப்பாக்கி முனையில் லொறியை வழிமறித்தனர்.

சாரதியையும் உதவியாளரையும் இறக்கிவிட்டு லொறியை அவர்கள் கடத்திச் சென்றனர்.

## யாழ். மாணவர் கணிதத்துறையில் பின்தங்கிவிட்டனர்

### பரிசளிப்பு விழாவில் உரை

காங்கேசன்துறை, டிச 3

யாழ்பகுதி மாணவர்கள் கணிதத்துறையில் முன்னர் நன்கு முன்னணியில் நின்றனர். ஆனால் இன்று இத்துறையில் அவர்கள் பின்தங்கிய நிலைக்கு வந்துள்ளனர். இதுபெரிதும் கவலைக்குரியது. எத்தனை கஷ்டங்கள் வந்தபோதும் மாணவர்கள் கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்".

வீமன்காமம் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு அண்மையில் நடந்தது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர். திரு. மு. சிவராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில்: மேற்படி வித்தியாலய மனையியல் கூடத்தை அடுத்த ஆண்டு அபிவிருத்தி செய்து தருவதாக உறுதியளித்தார்.

காங்கேசன்துறை வட்டாரக் கல்விஅதிகாரி திரு. பி. சிவஞானசுந்தரம் பேசுகையில்:- இவ் வித்தியாலயத்தில் பரிசளிப்பு நிகழ்ச்சிக்காக நிரந்தர நிதியம் ஒன்று ஏற்படுத்தியுள்ளமையை மாதிரியான பாராட்டுதற்குரிய முயற்சி என்று குறிப்பிட்டார்.

## இருளில் மூழ்கியது

அச்சுவேலி, டிச. 3

அச்சுவேலி கிராமத்தின் பெரும் பகுதி இருளில் மூழ்கியது.

அச்சுவேலி சந்தையடியில் அமைக்கப்பட்டுள்ள உப மின்சார நிலையம் புதன்கிழமை இரவு திடீரெனப் பழுதடைந்தது.

இதனால் இந்த உப மின்சார நிலையத்திலிருந்து மின் விநியோகம் நடைபெற்ற பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது.

## கோப்பாயில் ஒலி பெருக்கியின் புதுச் சேவை!

நல்லூர் டிச. 3

சட்டவிரோதமின் பாவனையைத் தடுத்து நிறுத்துமாறு கோப்பாய் பொது மக்களிடம் ஒலி பெருக்கி மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் – உப-அலுவலக ஊழியர்கள் உட்பட பிரஜைகள் குழுக்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள் ஆகிய 23 ஸ்தாபனங்கள் ஒருமனதாக பொதுமக்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

### வெளி உலகில்

# பாகிஸ்தான் அணுசக்தி ஆராய்ச்சி தொடரும்

### ஸியா பேட்டி

ஜெத்தா, டிச. 2

அணுசக்தி ஆராய்ச்சி வேலைகளில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபடும்.

இப்படி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

சவூதி அரேபிய சஞ்சிகை ஒன்றுக்கு அவர் பேட்டியளித்தார்.

பாகிஸ்தானின் அணுசக்தி ஆராய்ச்சியை ரஷ்யா, இந்தியா எதிர்க்கின்றன. அவற்றின்எதிர்ப்புக்களை பாகிஸ்தான் பொருட்படுத்தாது மற்றவர்களின் உதவியுடன் இஸ்ரவேல், பாகிஸ்தானில் உள்ள அணு ஆராய்ச்சி ஆலைகள்மீது குண்டுத்தாக்குதல் நடத்தலாம் என்று பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது.

பாகிஸ்தான் சமாதான நோக்கங்களுக்காகவே அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபடுவதாகக் கூறியும் அமெரிக்கா எம்மை நிர்ப்பந்திக்கிறது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## உளவு அம்பலமானதால் அமெரிக்க இஸ்ரேல் உறவில் விரிசல்

டெல் அவிவ், டிச 2

அமெரிக்காவில் அம்பலமான உளவு நடவடிக்கைகள் அமெரிக்க-இஸ்ரவேல் உறவுகளில் விரிசலை ஏற்படுத்தி உள்ளன.

இஸ்ரவேலுக்கு ரகசிய தகவல்களை அனுப்பினார் என்ற சந்தேகத்தில் அமெரிக்க யூதர் ஒருவரை, அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்து இருந்தனர்.

அதைத் தொடர்ந்தே, இந்த விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த உளவு நடவடிக்கை சம்பந்தமாக அமெரிக்க அரசு, இரண்டு இஸ்ரேலிய ராஜதந்திரிகளை விசாரிக்க உள்ளது.

அந்த இரண்டு ராஜதந்திரிகளும் முன்னர் அமெரிக்காவில் பணியாற்றினர். பின்னர் அவர்களை இஸ்ரவேல் திருப்பி அழைத்துக் கொண்டது.

அந்த இரண்டு ராஜதந்திரிகளையும் அமெரிக்க அதிகாரிகள் விசாரணை செய்வதை இஸ்ரவேல் எதிர்க்கும்.

இப்படி இஸ்ரவேல் பிரதமர் ஷிமொன் பெரெஸ் அறிவித்துள்ளார்.

"அமெரிக்காவின் நீதிமன்ற விசாரணைகளில் நாம் தலையிடவில்லை. இஸ்ரவேல் நாட்டுக்குள் எமது சட்டப்படியே நடப்போம்"

இப்படி பிரதமர் சொன்னார்.

சம்பந்தப்பட்ட ராஜதந்திரிகளை இஸ்ரவேல் திருப்பி அழைத்துக் கொண்டது அமெரிக்காவுக்கு ஆத்திரத்தைக் கொடுத்துள்ளது.

## தமிழ்நாடு அமைச்சர்கள் உட்பட 40 பேர் விஷவாயுவால் பாதிப்பு

சென்னை, டிச. 2

மேக்கியூரி விளக்கில் இருந்து வெளிவந்த நச்சுவாயுக் கசிவினால் 40 பேர் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் உட்பட 4 அமைச்சர்களும் அடங்கி உள்ளனர்.

வட ஆற்காட்டில் நடந்த வைபவம் ஒன்றில் இந்த விபத்து இடம்பெற்றது.

வைபவம் ஒன்றில் அமைச்சர்கள் கலந்து கொண்டிருந்த சமயம் இந்த நச்சுவாயு ஒழுக்கு ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட ஏனைய அமைச்சர்கள் திருவாளர்கள் எஸ். இராமச்சந்திரன், முத்துசாமி, அருணாசலம் ஆவர்.

பாதிக்கப்பட்ட பொதுமக்களில் நால்வர் உடனடியாக காஞ்சிபுரம் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் நால்வரும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## லிபியாவை முற்றுகையிட எகிப்து திட்டமிடுகிறது

### லிபியா குற்றச்சாட்டு

குவைத் டிச. 2

லிபியாவை முற்றுகையிட எகிப்து திட்டமிட்டிருக்கின்றது.—

இப்படி லிபியா குற்றஞ் சாட்டியது.

'லிபியாவிற்கு எதிரான போர் நடவடிக்கைகளில் எகிப்து திட்டமிடவில்லை என்று எகிப்திய வெளிநாட்டு, பாதுகாப்பு அமைச்சர்கள் கூறுவதே, அவர்கள் கூற்றுக்கு முரண்பாடாக உள்ளது.'—

இப்படி லிபியாவின் குவைத் நாட்டுத் தூதர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"உண்மையான மோதல் லிபியாவிற்கும் அமெரிக்காவுக்குமே".

அமெரிக்காவின் வாகனமாக மட்டுமே எகிப்து இருக்கின்றது.

அமெரிக்கக் கடற்படை கப்பல்கள் 4,500வீரர்களுடன் இஸ்ரவேலிய துறைமுகத்திற்குச் சென்றுள்ளது.

விமானந்தாங்கி, நாசகாரி, அணு ஆயுதக்கப்பல்கள் இவற்றில் அடங்குகின்றன"

இப்படி அந்த அறிக்கை கூறுகின்றது.

உதய சங்கற்பம்

சாதி வேறுபாடுகளை வளர்க்காதே.
'சாதி இரண்டொழிய வேறில்லை'
என்ற பழந்தமிழ் வாக்கியத்தை
வேதமாகக் கொள்.

— பாரதியார்.

உதயன்
உண்மை — அருஞ்சாமை — நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
3-12-85 த.பெ. 23

# யாழ். நகருக்கு நிரந்தர வெள்ளத் தடுப்பு முறை

## மாநகர ஆணையாளர் சிவஞானம் புதிய திட்டம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்ச்சியாகப்பத்தொன்பது நாட்கள் பெய்த அடைமழை காரணமாக அண்மையில் பெருவெள்ளம் ஏற்பட்டது.

பத்தொன்பது தினங்களும் 1052 மில்லி மீட்டர் மழை வீழ்ச்சியை யாழ்குடா நாடு கண்டது. ஒரு நாளில் (நவம்பர் 9ம் தேதி மட்டும் 157 மில்லிமீட்டர் மழை இங்கு பெய்தது.

25-10-85 முதல் 31-10-85 வரை 405 மில்லி மீட்டர் மழையும் 1-11-85 முதல் 12-11-85 வரை 647 மில்லி மீட்டர் மழையும் பெய்ததாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இப்பெருமழை காரணமாக யாழ்ப்பாண மாநகரம் பெரிதும் பாதிப்பு அடைந்தது. யாழ்ப்பாண பல்நிலையம், பெருந் தெருக்களில்கூட வெள்ளம் பாய்ந்து ஓடியது.

அடைமழை பெய்யும் போது யாழ்மாநகரில் இந்நிலை அடிக்கடி ஏற்படுவதை அண்மைக் காலங்களில் காண்கிறோம். யாழ் மாநகர பிரதேச மக்கள் கூட வீடு வாசல்களை இழப்பதும், அகதிகள் ஆவதும் ஒரு சமூகப் பிரச்சினையாக உருவெடுக்கிறது.

யாழ்மாநகர பிரதேசத்தில் காலத்திற்குக் காலம் ஏற்படும் வெள்ளப் பெருக்கை நிரந்தரமாகத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடுகிறார் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம். இதுகாலவரை மேற்கொள்ளப்படாத நல்ல திட்டமிது.

நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி யாழ்ப்பாணம் மாநகர சபை ஆய்வுகளை மேற்கொண்டு உள்ளது. மாநகர பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணிகளை மாநகர பிரதேச அதிகாரிகள் தமது ஆய்வுகள் மூலம் இனங்கண்டு உள்ளனர்.

— வே. வரதசுந்தரம் —

யாழ் மாநகர சபைப் பிரதேசத்துக்குவெளியே சேரும் வெள்ளமும் யாழ் மாநகரம் ஊடாகவே பாய்ந்து செல்கிறது. இதனால் மாநகரப் பகுதியில் வெள்ளம் ஏற்படுகிறது.

முன்னர் யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம், நெடுஞ்சாலைத்திணைக்களம் ஆகியவற்றால் சில வாய்க்கால்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. இவை அவைகளின் பொறுப்பிலுள்ள வாய்க்கால்கள். ஆனால் இப்போது சில ஆண்டுகளாக இத்திணைக்களங்கள் அவற்றைச் செவ்வனே பராமரிப்பது இல்லை. இதனாலும் இப்பகுதியில் வெள்ளம் ஏற்படுகிறது.

யாழ்நகரில் முன்னரிலும் பார்க்கப் பெருந்தொகையான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. தாழ்ந்த பிரதேசங்களில் வீடுகள் அமைக்கப்படுகின்றன. வாய்க்கால்களில் வீடுகள் அமைக்கப்படுகின்றன. தண்ணீர் ஓடும் வாய்க்கால்களிலே குப்பைகள் கொட்டப்படுகின்றன. இவற்றாலும் வெள்ளம்ஏற்படுகின்றது

வீடுகளைச்சுற்றிவேலைத்து எல்லைச் சுவர்களைக் கட்டும்போது நீரோட்டத்துக்கு வழிசெய்வதில்லை 10 அடி இடைவெளியில் தண்ணீர்ஓட வசதி செய்யப்படவேண்டும் என்பது நடைமுறை. இது மீறப்படுவதாலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக்கட்ட நிர்மாண தொழில் நுட்ப ஆலோசனை அடிப்படையில் மேற்கொள்வது அவசியம்.

இவ்வேலைகளைப்பூர்த்தி செய்ய ஒருகோடியே ஐம்பது லட்சம் ரூபா தேவைப்படும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிதியை உள்ளூராட்சி அமைச்சு, திட்டமிடல் அமைச்சு, மாவட்ட அமைச்சு ஆகியவற்றிடமிருந்து பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மாநகர ஆணையாளர் திரு. சிவஞானம் உதயனிடம் விளக்கினார்.

## திருமலை என்ற ஒரு கவர்ச்சிப் புள்ளி

திருமலையில்கைதான ஏழு தமிழர்கள் மர்ம மரணம். சம்பூர் கூனித்தீவில் எண்பது தமிழரைக் காணவில்லை.

பத்திரிகைகளைத் திறந்ததும் திருமலையில் நிகழும் மரணங்கள்பற்றிய செய்திகளையே அதிகம் காணமுடிகிறது. தமிழர்களைப் பொறுத்தமட்டில் திருமலை இப்போது ஒரு கொலைக்களம். அதனால் தான் அங்கு வசிக்கும் தமிழரின் எண்ணிக்கை மிகக் குறைந்து விட்டது.

தமிழர்வாழும் பிரதேசங்கள் எல்லாம் இப்போது மரணப் பிராந்தியங்களாக மாறி வருவது சாதாரணமாகிவிட்டது. தமிழ் மகன் ஒருவனின் உயிர் எப்போது, எங்கு, எப்படிப் பிரியும் என்பதைச் சொல்ல முடியாத பயங்கர நிலை உருவெடுத்துள்ளது. தமிழனுக்கு உடைமையும் நிரந்தரமில்லை, உயிரும் நிச்சயமில்லை என்ற இறுதி நிலை தோன்றி வருகிறது.

அப்படி ஒரு சூழ்நிலையிலும் கூட திருகோணமலை தனித்து வகுக்கப்பட்டு விட்டது. அங்கு தான் பெரிதாகக் ''கண்'' வைக்கப்பட்டிருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அரசாங்கம் தயாரித்ததும்,தமிழ்க்குழுக்கள் நிராகரித்ததுமான இனப் பிரச்சினைத் தீர்வுக்கான நகல் செயல்திட்ட அறிக்கை இப்போது வெளிவந்திருக்கிறது. அந்த அறிக்கையை ஊன்றிப் படித்தால், திருமலை மீது எத்துணை அளவுக்கு அரசு அக்கறை கொண்டுள்ளது என்பது புலனாகும்.

திருமலையின் இயற்கைத் துறைமுகம் உலகப் பிரசித்தி பெற்றது. வல்லரசுகளைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிப் புள்ளி. அதனால்தான், இனப்பிரச்சினைக்கு எந்த விதமான தீர்வு வந்தாலும் திருகோணமலையை தனதாக்கி விட வேண்டும் — தனது அதிகாரத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்று அரசாங்கம் நினைக்கிறது. திருமலையை வைத்து வல்லரசுகளுடன் சதுரங்கம் விளையாட வாய்ப்புண்டு என்பதும் அதற்குத் தெரியும்.

அதிகாரப் பரவல், நிர்வாகப் பன்முகப் படுத்தல் எனப் பலவாறு வார்த்தை ஜாலம் காட்டி இனப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என அரசு நினைக்கலாம்.

ஆனால் தமிழர் பிரதேசங்களில், அவர்களே தமது அலுவல்களை நடத்த இடம் தராத எந்தத் தீர்வினாலும் தமிழரைத் திருப்திப் படுத்த முடியாது. அவர்கள் அனுபவித்த இன்னல்கள் அந்த அளவுக்கு அவர்களைத் தள்ளிவிட்டது. தமிழர்கள் பாதுகாப்பாக வாழத்தேவையான வசதி செய்யப்பட வேண்டும். அதனைத் தராத எந்தத் தீர்வும் ஒத்துப்போகா.

வன்செயல்கள் மூலம் தமிழர்களை திருமலையில் இருந்து விரட்டிவிடவும் பலருக்குத் திட்டங்கள் இருக்கலாம். ஆனால் அவை நீண்டகாலத்துக்குப் பயன்தரா.

திருமலையை ஒருபுறமாக்கிவிட்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வது அச்சு இல்லாமல் தேர் ஓட்ட முயல்வது போலாகும்.

# சமாதானப் பேச்சுகள் முடியும்போது நாம் அனைவரும் இறந்து விடுவோம்

## நெடுமாறன் இலங்கை விஜயத்தின் 30 மணி நேர 'டேப்' விபரம்

வந்தவரைச் சுற்றி ஒரு கூட்டம். அவர்கள் முகங்களில் ஒரு பரபரப்பு,அக்கறை.

கூட்டத்தின் நடுவில் இருந்து வெளியே வந்து ஒரு வயோதிபப் பெண் அலறுகின்றார்.

''எங்களுக்குபொடியன்கள் (தமிழ்ப் புலிகள்) உதவிதான்தேவை. நாம உயிர்தப்பி இருப்பதே அவர்களால் தான். எமக்கு ஈழம் தான்தேவை'' இதுதான் அந்த பெண் கூறியது.

இன்னொரு நேரம்.இன்னொரு இடம்.

கணவனின் மரணம் பற்றிக் கூறிய மனைவி, மயங்கி விழுகின்றார், அவர் கெஞ்சுகின்றார். ''ஒன்றில் எம்மை கடலினுள் தள்ளுங்கள் அல்லது எமதுபையன்களுக்கு ஆயுதங்களைக் கொடுங்கள்''.

மன்னாரில் இருந்து ஒரு முஸ்லீம் உறுதிப்படுத்துகின்றார்; ''தமிழர்களில் இருந்து எம்மை(முஸ்லீ. களை) பிரிகக முடியாது நாமும் தமிழரும் ஒன்றே.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி எங்கும் இதே நிலைமை தான்.

வந்த விருந்தாளி தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு.பி. நெடுமாறன்.

அவர் தன்னுடன் 30 மணித்தியாலங்கள் ஓடும் வீடியோ ரேப்புக்களை இலங்கையில் இருந்து சென்னை திரும்பும்போது கொண்டு வந்து இருந்தார்.

இலங்கையின் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் 23நாள் ரகசியச் சுற்றுப் பிரயாணத்தின்போது எடுக்கப்பட்ட 'வீடியோ ரேப்புக்கள் தான் இவை.

இந்த பயணத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தான் ஒழுங்கு செய்தது.

தமிழீழ ஆதரவாளர் திரு.நெடுமாறன் 1500 மைல்கள் கடல், தரை மார்க்கமாகப் பிரயாணம் செய்து நூற்றுக் கணக்கானோரை இலங்கையில் சந்தித்தார்.

அரச ஊழியரோ, காட்டுக்குள் பயந்து ஒதுங்கிய அகதிப் பெண்களோ வர்த்தகரோ, எல்லாத் தரத்தினரும் ஒரே குரலில் கூறுவது, சிங்களவர்—தமிழர் இனியும் இணைந்து வாழ முடியாது என்பது தான்.

தமிழ் ஈழம் ஒன்றில் தான் தமிழரின் வருங்காலம் தங்கியுள்ளது.

சமஷ்டி ஆட்சி கூட இனி உதவாது — இப்படி அவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

இவற்றை வீடியோ ரேப்புக்கள் கூறுகின்றன. வீடியோ ரேப்புக்களில் இடம்பெற்றவை திட்டமிட்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளும் அல்ல; சம்பவங்களும் —ல்ல.

தமிழர்கள், பிரதமர் ராஜீவ் காந்தி இனப்பிரச்சினையைக் கையாளும் விதம் குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

''இந்திரா பதவியில் இருந்த பொழுதும் தமிழர்க்கு எதிராக வன்செயல்கள் இடம் பெற்றன, திருமதி இந்திராவின் கவனத்திற்கு அவை கொண்டுவரப்பட்ட சில நிமிடங்களில் வன்செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுவிடும்.

''நிலைமை இப்பொழுது அப்படி அல்ல. வன் செயல்கள் அதிகரிக்கின்றன''இப்படி ஒரு பெண் சொன்னார்.

அரசு ஊழியர் ஒருவர் கெஞ்சுகின்றார். ''இந்தியா உதவ முடியா விட்டால்,கரைச்சல் கொடுக்காமலாவது இருக்கட்டும். தமிழர் மீது திரு. ராஜீவ் காந்திநிர்ப்பந்தம் செலுத்தாவிட்டால் அதுவே பெரிய உதவியாக இருக்கும்''

பெண் ஒருத்தி ஆத்திரத்துடன் கூறுகின்றார். ''சமாதானப் பேச்சுக்கள் முடிவடையும் போது, நாம் எல்லாரும் இறந்து விடுவோம்.

தமிழ் மக்கள் தங்கள் பிரதேசங்களில் பயத்துடன் வாழ்கின்றனர். இதை 23நாள் பயணத்தின் போது திரு. நெடுமாறன் காணக்கூடியதாக இருந்தது.

விவசாயம் மீன்பிடி நடவடிக்கைகள் ஸ்தம்பித்து விட்டன. அப்படி துணிந்து தொழில் செய்யப் போனால் போதும் ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிச் சூடு வரும். சிவில் நிர்வாகம் சீராக இல்லை. மக்கள் வரி செலுத்த மறுக்கின்றனர்.

வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. சில பள்ளிக்கூடங்களைத் தவிர ஏனையவை மூடப்பட்டுள்ளன.

போர் நிறுத்தம் என்பது ஒரு மோசடி என்று திரு. நெடுமாறன் கூறுகின்றார்.

திருகோணமலை, மட்டக்களப்பு யுத்த களங்களாக இலங்கை இராணுவத்தினரால் மாற்றப் பட்டு விட்டன. திருகோணமலையைச் சுற்றி உள்ள தமிழ்க் கிராமங்களை விட்டு மக்கள் வெளியேறி விட்டார்கள். பட்டினத்தில் உள்ள தமிழரை இராணுவம் வெளியேற்றிக் கொண்டு இருக்கின்றது.

ஜூனில் யுத்தநிறுத்தம் வந்தது. அதன் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 21 இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டு விட்டன. ஒவ்வொரு 10 மைல் தூரத்திற்கு இராணுவ முகாம் இப்பொழுது உண்டு.

தமிழ்ப் போராளிகள் பதுங்கி இருந்து இராணுவத்தைத் தாக்கினால் அது யுத்த நிறுத்த மீறல். அதைத் தொடர்ந்து தமிழ்க் குடிமக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல், பழிவாங்கல் நடவடிக்கைகள்.

போராளிகளின் முகாம்களை இராணுவம் தாக்கினால், அது 'சட்டம் ஒழுங்கு பேணல்' என்று கூறப்படுகின்றது.

அது பற்றி கவனிக்கத் தேவை இல்லை என்று கண்காணிப்புக் குழுவுக்கு கூறப்பட்டுள்ளது'' - இப்படி திரு. நெடுமாறன் கூறுகின்றார்.

வீடியோ படத்தில் 1983இல் நடந்த இனக் கலவரம் பற்றி ஒரு பிராமணர் விவரமாக எடுத்துக் கூறுகின்றார்.

எல்லாரும் போராட வேண்டும் என்றே கூறுகின்றனர்.

''பிஸ்டல் ஒன்று தாருங்கள். எனது மற்றக் கையால் அதைப் பாவிப்பேன்'' — இப்படி கூறுகின்றார் ஒரு கை பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்டிருந்த வயோதிபர்.

''சுடவும் தயார் சூடு வேண்டவும் தயார்'' — இப்படி இன்னொருவர் கூறுகின்றார்.

இவை தான் 30மணித்தியாலய வீடியோ ரேப்புக்கள் இலங்கைத் தமிழர் பற்றி கூறுவது.

நன்றி''புரொன்ட்லைன்,'

— ரி. எஸ். சுப்பிரமணியன்

### பொய்யாமொழி



தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் - அரிது

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய இருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

## வவுனியா அகதிகளுக்கு உதவி கோரிக் கடிதம்

### பருத்தித்துறை பிரஜைகள் குழு

பருத்தித்துறை, டிச. 3

யாழ்ப்பாணத்தில் தஞ்சம் அடைந்துள்ள வவுனியா அகதிகளுக்குத் தொடர்ந்துஉதவிவழங்க நடவடிக்கை எடுங்கள்.

பருத்தித்துறை பிரஜைகள் குழு ஜனாதிபதியை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் ஜனாதிபதிக்கு இதுபற்றிக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார்.

கடிதத்தில் பேராசிரியர் கூறியிருப்பதாவது:

வவுனியா அகதிகளுக்கு நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டது ஆச்சரியத்தைத் தருகின்றது.

வவுனியாவில் தமிழர்கள் இன்னும் கஷ்டப்படுவதாக எமக்குத் தகவல்கள் வந்துகொண்டே உள்ளன.

லட்சக்கணக்கானரூபா பெறுமதியான அவர்களின் பொருள்கள் கொள்ளையிடப்பட்டன; எரிக்கப்பட்டன.

இந்த நிலையில் அவர்களை வவுனியாவுக்குத் திரும்பிச் செல்லும்படி கற்பனைவில்கூட கேட்க முடியுமா?

ஆகவே வவுனியாவில் நிலைமை வழமைக்குத் திரும்பும்வரை, யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்தவர்களுக்குத் தொடர்ந்தும் நிவாரண உதவிகள் வழங்க உத்தரவிடுங்கள்.

இப்படி கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## பயிற்சி வகுப்பு

நாகர்கோவில் டிச. 3

பருத்தித்துறை கல்வி வட்டாரங்களிலுள்ள கனிஷ்ட வித்தியாலய அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிவகுப்புக்களை யாழ். கல்வித் திணைக்களம் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடத்தியது.

## தெங்கு அபிவிருத்தி திட்டம் கைவிடப்பட்டது

தாளையடி டிச. 3

அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்ட தெங்கு அபிவிருத்தித் திட்ட வேலைகள் அரசாங்கத்தால் இடை நிறுத்தப்பட்டன.

வடக்கில் இடம்பெற்று வரும் கொள்ளைகளினாலேயே இத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

### சமய சந்நிதிகளில்

காரைநகர், டிச. 3

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் வருடாந்த திருவெம்பாவை உற்சவம் இம்மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிறது. 26ஆம் திகதி இரதோற்சவமும் அன்றிரவு நடேசர் அபிஷேகமும் மறுநாள் 27 ஆம் திகதி உதயத்தின் முன் ஆருத்திரா தரிசனமும் பகல் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

#### சித்தன்கேணி

வட்டுக்கோட்டை, டிச. 3

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோல ஆதிவைரவப்பெருமான் கோவில் புனருத்தாரண வேலைகள் சுமார் 2லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

#### சிரமதானம்

அச்சுவேலி, டிச. 3

அச்சுவேலி வடக்கு அந்தோனியார் கோவில் வடி வெள்ள வாய்க்கால் சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், டிச 3

இடமாற்றம் பெற்றுச் செல்லும் இரண்டு ஆசிரியர்களுக்கு, யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் இன்று செவ்வாய்க் கிழமை 3. 12.85 பிரியாவிடை நிகழ்ச்சி ஒன்றை நடத்துகின்றது.

திரு. க. சண்முகசுந்தரம், திரு. ச சந்தியாப்பிள்ளை ஆகியோரே இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள்.

#### நல்லூர்

நல்லூர், டிச 3

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நான்கு மணி அளவில் அதிபர். திரு. பொ. நடராசா தலைமையில் கலைவிழா நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினர்களாக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சியாம்பிள்ளை, யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. சிவநாயகமூர்த்தி கலந்து கொள்கின்றார்.

### வித்தாரம்

வாங்க முரளித் தம்பி,

அஞ்சாறு நாளா வெளுத்து வாங்கினீங்களே. ஊரெல்லாம் பெரிய வரவேற்பு இருக்குமெண்டு நினைக்கிறன்.

அது இருக்கட்டும், பெரிய இடத்துச் சமாச்சாரம் ஏதாவது அறிஞ்சனியே! என்னப்பா, அது தெரியாமல் இருக்கிறாய் போலை.

இலங்கை நாட்டுப் பெரிஅய்யா இந்தக் கிழமைக் கடைசியிலை டாக்காவுக்குப் போறாராம். அங்கை இந்தியாவின்ரை பெரியவரைச் சந்திக்கிறாராம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு எண்டது பற்றி பேந்தும் ஏதோ பேசப் போகினமாம்.

நீ சொல்லுறதும் மெத்தச் சரிதான் தம்பி. உந்த இனப் பிரச்சினைத் தீர்வு எத்தனை காலமாய் இழுபடுகுது. எல்லாம் சும்மா காலம் கடத்திற நாடகம்தான். உள்ளுக்குள்ளை ஒண்டை நினைச்சுக் கொண்டு வெளியிலை வேறை ஒண்டை செய்வதாகக் காட்டப் போனால் உப்பிடித் தான்.

அது ஒரு பக்கம் இருக்கட்டும். பார்த்தசாரதி மாமாவை வேண்டாம் எண்டு சொன்ன பிறகு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலை பண்டாரி அண்ணை பறந்து திரிஞ்சது உனக்குத் தெரியும் தானே அவற்ரை மேனுக்கு அடுத்தகிழமை கலியாணமாம். அதிலை பாதுகாப்பார் கலந்து கொள்ளுவார் எண்டு ஒரு கதை வந்திது' இப்ப அப்பிடி இல்லை அவரோ, இலங்கையிலிருந்து டாக்டா போகும் எவருமோ கலியாண வீட்டுக்குப் போக மாட்டினம் எண்டு ஒரு விசளம் வந்திருக்கு.

பண்டாரி மகனின்ரை கலியாணத்திற்குப் போய் தாலா பிடித்தாலும் இந்தியாவைப் பேய்க்காட்டேலாது எண்டு ஏதாவது அசுகை தெரிஞ்சதோ என்னவோ!

விட்டிடுவம், பெரிய இடத்து விஷயங்கள். ..!

### கொண்டாடி

## புகார்களை தந்தி மூலம் தெரிவிக்க தடை

மட்டக்களப்பு டிச [...]
ஆயுத படையினரின் அத்து மீறல்கள் தொட[...] பான புகார்களை இல[...] எவரும் தந்தி மூலம்தெ[...] விக்க முடியாது.

இத்தகைய தந்திகளை ஏற்றுக் கொள்ள வேண்[...] டாமென அஞ்சல் ம[...] அதிபதியினால் சக[...] தபால் நிலையங்களுக்கு[...] அறிவிக்கப்பட்டுள்ளது.

### மக்கள் முகம்



யாழ்ப்பாணம் டிச. [...]
இலங்கை வங்கியி[...] யாழ்ப்பாணப் பிராந்தி[...] முகாமையாளர் தி[...] செல்லையா ஸ்ரீரங்[...] நாதன் கருத்தரங்கு ஒ[...] றில் கலந்து கொள்வத[...] காக பாங்கொக் செ[...] கின்றார்.

இக் கருத்தரங்[...] அதி காரிகள் பரிமாற்[...] பயிற்சித் திட்டத்தி[...] கீழ்ஆசிய, பசுபிக் பிரா[...] திய விவசாயக் கட[...] சங்கத்தின் ஆதரவி[...] ஒழுங்கு செய்யப்பட்டு[...] ளது.

டிசம்பர் 8 இல் ஆர[...] பமாகும் இக்கருத்தரங்[...] இரண்டு வாரங்க[...] தொடர்ந்து, நடக்கு[...] திரு. ஸ்ரீரங்கநாத[...] டிசம்பர் 7ஆம் தி[...] பாங்கொக் செல்கிறா[...]

ஐஸ்கிறீம், கேக் வகைகள், பழரச பானங்கள் இவைகளைச் சுவை குன்றாமல் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள் யாவற்றையும் பெற்றுக்கொள்ள
*
அபிராமி எசன்ஸ் றேட்ஸ்
31, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ஈஸ்டர்ன் பேக்கரி பஸ் நிலைய முன்பாக)

# உதயன்

3 - 12 - 1985

HYCO, YEAST, பேக்கிங் பவுடர், மிளகு பவுடர், ஐசிங் சுகர், GOLDEN SYRUP சஜு", பிளம்ஸ் யாவற்றையும் தட்டுப்பாடின்றி விற்பனை செய்பவர்கள்
*
ஐடியல் ஏஜென்ஸி
267 B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23648

# கூட்டணி குழு நாளை சென்னை வருகிறது

## தனித்து யோசனை சமர்ப்பிக்கும் திட்டம் ஏதும் கிடையாதாம்

சென்னை, டிச 3

நேற்று முன்தினம் புதுடில்லி சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் மூவரும் நாளை மீண்டும் சென்னை திரும்புவார்கள்.

புதுடில்லியில் இவர்கள் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்தார்கள்.

திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு இரா. சம்பந்தன் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்த கூட்டணிக் குழுவினர் இனப் பிரச்சினை தொடர்பாக புதிய யோசனை எதனையும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

தனித்து யோசனை சமர்ப்பிக்கும் திட்டம் எதுவும் கூட்டணியிடம் கிடையாது என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## சரண்சிங் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, டிச. 2

இந்தியாவின் முன்னாள் பிரதமரும் லோக்தள் கட்சித் தலைவருமான சரண்சிங் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுமாலை டாக்டர் ராமமனோக லோகியா மருத்துவமனைக்குச் சென்று அவரைப் பார்த்தார்.

## பஞ்சபாண்டவர்களை தேடுகிறார்கள்

பீகிங், டிச. 3

சீனாவிலும் 'பஞ்சபாண்டவர்களைத்' தேடுகின்றார்கள்.

பாரதத்தில் திரௌபதி, பஞ்சபாண்டவர்களை திருமணஞ் செய்தார்.

ஐந்து சகோதரர்களுக்கு திரௌபதி பத்தினியாக இருந்தார்.

ஆனால் சீனாவில் கூடப்பிறந்த 5 சகோதரிகள் கூடப் பிறந்த 5 சகோதரர்களை தனித்தனியே திருமணம் செய்ய விரும்புகின்றனர்.

சீனாவின் குவாங்டொங் மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து சகோதரிகள் கூட்டாக உள்ளூர் சஞ்சிகை ஒன்றுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.

இப்படி 'சைனா டெய்லி' என்ற நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்படி சஞ்சிகையில் வேண்டுகோள் வெளிவந்ததைத் தொடர்ந்து ஐந்து சகோதரிகளுக்கும் 20 குடும்பங்களில் இருந்து பதில்கள் வந்துள்ளனவாம்

இந்த ஒவ்வொரு குடும்பத்திலும் தலா 5 சகோதரர்கள் திருமணத்திற்கு தயாராக இருக்கிறார்கள்.

## ஜெனரல் விடுதலை

மணிலா, டிச. 2

பிலிப்பீன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனிக்னோ அக்கினோவை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த ராணுவ பிரதம ஜெனரல் பேபியன் வெர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆறு பேர் கொண்ட விசேட நீதிமன்றம் அவரையும் ஏனைய 25 எதிரிகளையும் விடுதலை செய்து நேற்று தீர்ப்பளித்தது.

தீர்ப்பு வெளியான சில மணித்தியாலங்களில் மீண்டும் அவரை இராணுவ கூட்டுத் தளபதியாக ஜனாதிபதி மார்க்கோஸ் நியமித்தார்.

## நிதிஒதுக்கீடு சட்டமூலம் அரசமைப்புக்கு முரண்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம் டிச. 3

தற்போது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் நிதி ஒதுக்கீடு சட்டமூலம் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 7ஆவது பிரிவுக்கு முரண்பட்டதாக இச்சட்டமூலம் அமைந்துள்ளது.

இப்படி உயர்நீதிமன்றம் ஏகமனதாக தீர்ப்பு வழங்கியது.

இருந்தாலும் 7ஆவது பிரிவின் கீழ் அரசின் அங்கீகாரத்துடன் அமைச்சர் மாற்றங்களை செய்யக் கூடியதாக நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தால் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம், அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்க மாட்டாது என்றும் உயர் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்தது.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணை முடிவிலே இத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்றத்தில் உப சபாநாயகர், இத் தீர்ப்பை வாசித்தார்.

## பஞ்சபாண்டவர்களை

## சாரதி லொறியுடன் மீண்டார் இளைஞரை காணவில்லை

அச்சுவேலி, டிச. 3,

வவுனியாப் பகுதியில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட லொறிச் சாரதி லொறியுடன் புத்தூருக்குத் திரும்பினார். ஆனால் லொறியில் இருந்த இளைஞர் ஒருவருக்கு என்ன நடந்தது என்பது தெரிவிக்கப்படவில்லை.

புத்தூரிலிருந்து பசளை ஏற்றுவதற்காக வவுனியாப் பகுதிக்குச் சென்றிருந்த லொறி பசளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பி வருகையில் பலத்த சோதனைக்கு உள்ளானது.

லொறி தடுத்து வைக்கப்பட்டது. லொறியில் இருந்தவர்கள் லொறியுடன் வவுனியா இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சாரதி உட்பட எல்லோரும் பலத்த தாக்குதலுக்குள்ளானார்கள். பின்னர் சாரதி லொறியுடன் விடுவிக்கப்பட்டார். இராணுவத்தினரின் சந்தேகத்துக்குள்ளான இளைஞரின் நிலை பற்றி தகவல் எதுவுமில்லை.

## பாபாவுக்கு எதிராக கோஷம் எழுப்பியவர் கைது

### பிரசாந்தி நிலையத்தில் சம்பவம்

அனந்தபூர், டிச 3

பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவிற்கு எதிராக கலோகம் எழுப்பிய ஒரு கனடா வாசியைப் பொலீஸார் கைது செய்தனர்.

பிரசாந்தி நிலையத்தில் பகவான் பாபா பேசிக்கொண்டிருக்கையில் இந்த நபர் பாபாவிற்கு எதிரான கோஷங்களை எழுப்பினாராம்.

சாயி பக்தர்கள், பிரஹமாரிக் பிரிபின் என்ற இந்தபரை மடக்கிப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

கனடா வாசிக்கு வயது 43. அவருக்கு வழங்கப்பட்ட விஸா செப்டம்பர் 15ஆம்திகதியுடன் முடிந்துவிட்டது. அவர் சட்டவிரோதமாக இந்தியாவில் தங்கி இருந்தது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

சாயி பக்தர்களின் மனதைப் புண்படுத்துவதாக நடந்து கொண்டது.

அனுமதி இன்றி நாட்டில் தங்கியிருந்தது— ஆகிய குற்றங்களை பொலீஸார் இந்த நபர் மீது சுமத்தியுள்ளனர்.

பாபா எதிர்ப்புச் கலோகத்தைக் கோஷித்த பின்னணியில் உள்ள காரணங்களை அறிய பொலீஸ் கோஷ்டி ஒன்று பெங்களூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை அனந்தபூர் பொலீஸ் அத்தியட்சகர் திரு. எஸ். எஸ்' ஹூடா வெளியிட்டார்.

## ரூபவாஹினி

செவ்வாய்க்கிழமை
3-12-85

மாலை

5-00 செய்தி
5-05 காணமுடியாத இரும்புமனிதன் -கார்டூன் தொடர்
5-30 கறுப்புக் குதிரையின் கதை
6-00 கூடைப்பந்தாட்டம்-பயிற்சி
6-15 உலக விவகாரம் (சிங்களம்)
6-30 செய்தி-தமிழ்
6-55 சங்கீத நிகழ்ச்சி (சிங்களம்)
7-25 நம்பமுடியாதது -ஆங்கிலப்படம்
8-00 செய்திகள்-சிங்களம்
8-20 ஆங்கிலப்படம் -தொடர்ச்சி
8-45 'சித்ஸர'-சிங்களம்
9-00 செய்திகள்-ஆங்கிலம்
9-20 காதல் படகு காதல் நகைச் சுவை (ஆங்கிலம்)
10-10 சுலிவன்ஸ் (அங்கம் 31)
11-00 ஒளிபரப்பு முடிவு

## இலங்கை அரசு...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணவேண்டுமானால் இத்தகைய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உண்மையில் சிங்கள மக்கள் யுத்தத்திற்கு தயாராக இருக்கின்றார்களா? இல்லை.

இந்தியாவுடனான உறவைப் பொறுத்தவரை நாம் அச்சத்துடனேயே வாழ்கின்றோம். இந்தியா சமாதானத்தை நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவின் பங்கு தவிர்க்கமுடியாதது ஆகிவிட்டது.

தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசாங்கத்துக்கும் ஈழ தேசிய விடுதலை முன்னணிக்கும் அல்லது வேறு எவருடனும் நடக்கலாம். ஆனால் பேச்சுவார்த்தை மேசையில் இந்தியாவும் கலந்து கொள்வது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

1983இல் இனக் கலவரம் நடந்து இரண்டரை வருடங்கள் ஆகியும் இன்னும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

அரசாங்கத்திடம் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அடிப்படைத் திட்டம் இல்லை.

இன்று இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று வெளிநாடுகளில் குற்றச்சாட்டுகள் நிலவுகின்றன.

தமிழர்களுக்கு இலங்கையில் சம உரிமை இல்லையென பிரசாரம் செய்கின்றார்கள். இதே சமயம் எல்லாவிதமான மனித உரிமைகளையும் மதிக்கும் சர்வதேச சாசனங்களில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளுக்கு பதிலளித்தே ஆக வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

## பாடசாலைகளை அவசரப்பட்டு மூடாதீர்

### பிரஜைகள்குழு கோரிக்கை

மட்டக்களப்பு, டிச 3

மட்டக்களப்புப் பகுதியில் எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்படும் போது அவசரப்பட்டு உடனடியாக பாடசாலைகளை மூடிவிட வேண்டாம். நிலைமையை அவதானித்து மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பி வையுங்கள்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழு சகல பாடசாலை அதிபர்களுக்கும் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரஜைகள் குழுவினர் எமது நிருபரிடம் அபிப்பிராயம் தெரிவிக்கையில் இப்பகுதியில் குண்டு வெடிப்பு, துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டவுடன் பாடசாலைகள் உடனடியாக மூடப்படுகின்றன. இந்நிலையில் தான் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் இச்சம்பவங்களை அடுத்து பெற்றோர்கள் உடனடியாக பாடசாலைகளுக்கு விரைந்து தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதையும் கைவிட வேண்டும் என்று பிரஜைகள் குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

## நகரில்

யாழ்ப்பாணம், டிச.3,

கொழும்புத்துறை — புனித பிரான்சிஸ்சவேரியார் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறுகிறது.

இந்த உற்சவத்தை முன்னிட்டு, பிற்பகல் 6.00 மணிக்கு ஒரு ஆங்கில நாடக நிகழ்ச்சியும், புனித பிரான்சிஸ் அசிசியாரைப் பற்றிய தென்மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறும்.

## கல்லடியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வயது 34. 1 குழந்தை -கனுதாவலை வாசி.

5. குழந்தைவேலு செல்வநாயகம் வயது 35. 2 குழந்தைகளின் தந்தை-கனுதாவலை வாசி

கல்லடி வாசியான டாக்டர் ஜீவானந்தன் தனது வீட்டு வாசல் படியில் திண்ணையில் துப்பாக்கிச் சூடுபட்டு மரணம் அடைந்தார்.

அடையாளம் காணாத நபர் உட்பட ஏனைய ஐந்து பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டவர்கள்.

மாதம் ஒரு தடவை பொலீஸ் நிலையம்சென்று கையொப்பம் இடவேண்டும் என்பதுதான் நிபந்தனை.

அதன்படி சம்பவதினம் பொலீஸ்நிலையம் சென்று கையொப்பமிட்டுவிட்டு வீடு திரும்புகையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதாக அவர்களின்உறவினர்கள்மூலம் தெரியவந்தது.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி கல்லடி பிரஜைகள் குழு, கண்காணிப்புக்குழுவைக் கேட்டுள்ளது.

## யாழ்.கொழும்பு..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

புறப்பட்ட சரக்கு வண்டி ஒன்று குருநாகலுக்கு அருகில் வெல்லேவா என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு தடம் புரண்டது. இதன் காரணமாக, கொழும்பில் இருந்து காலை யாழ் நோக்கி புறப்படவேண்டிய இன்டர்சிட்டி, பிற்பகல் 12.10 மணிக்கே புறப்பட்டது.

அதுபோல காலை 8.00 மணிக்கு புறப்படவேண்டிய யாழ்தேவி நண்பகல் 12 மணிக்கே புறப்பட்டது. இரவு 9.25க்குயாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு காலை 8 மணிக்குப் புறப்பட வேண்டிய உதயதேவி ரயிலும் காலை 11 45 மணிக்கே புறப்பட்டது.

## பொலீஸ் அதிபர் ஓய்வு பெறுகிறார்

கொழும்பு, டிச. 3,

பொலீஸ் மா அதிபர் ஹியூபர்ட் வீரசிங்க நாளை மறுதினம் ஓய்வு பெறுகிறார்.

டிசம்பர் 4 அவரின் 60ஆவது பிறந்த தினம்.

## விளையாட்டரங்கு

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில்

# பாடசாலை அணிகளுக்கு ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ்ப்பாண பாடசாலைகள் முதலாம் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று முதல் தடவையாக அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

யாழ். பாடசாலைகளின் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையில் இதுவரை காலமும் சுற்றுப்போட்டி ஏதும் நடைபெறவில்லை

சிநேகபூர்வமான ஆட்டங்களில் மட்டுமே முதலாம் பிரிவு அணிகள் விளையாடிவந்தன.

இக்குறையை நீக்குவதற்காக அடுத்த ஜனவரியில் ஆரம்பமாகும் 1986ஆம் ஆண்டிற்கான கிரிக்கெட் பருவ காலத்தில் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்த இட்டமிடப்பட்டிருக்கிறது.

இச் சுற்றுப்போட்டிக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஆராய்வதற்காக யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நாளை புதன் கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கூடுகிறது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சங்கச் செயலாளர் திரு. எஸ். தனபாலன் செய்துவருகிறார்.

பிரபல பொது நல சேவை ஸ்தாபனம் ஒன்றின் ஆதரவில் இச் சுற்றுப்போட்டி நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டிவிதிகள், அணி வீரர்களின் வயதெல்லைப் பிரிவு ஆகியவைகள்பற்றி நாளை நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் இன்னிங்ஸில்

## நியூஸிலாந்து அணிக்கு 96 ஓட்டங்கள் அதிகம்

பேர்த், டிச. 3

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது (இறுதி) கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதலாவது இன்னிங்ஸ் ஆட்டத்தில் நியூஸிலாந்து 96 ஓட்டங்களை அதிகமாகப் பெற்றிருக்கிறது.

இந்த போட்டி பேர்த்தில் கடந்த சனியன்று ஆரம்பமானது. மூன்றாவதுநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது

இரண்டுவிக்கெட்இழப்புக்கு 184 ஓட்டங்களுடன் நேற்றுக் காலை துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நியூஸிலாந்து அணி 299 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

புரூஸ் எட்கார் 74, மார்ட்டின் குரே 71, ரிச்சர்ட் ஹட்லி 26, பிரெய்வல் 28 ஓட்டங்களைப்பெற்றனர்.

நேற்றைய ஆட்ட இறுதியின்போது ஆஸ்திரேலியா இரண்டு விக்கெட் இழப்புக்கு 38 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

இன்னிங்ஸ் தோல்வியைத்தவிர்ப்பதற்கு ஆஸ்திரேலிய அணி இன்னும் 58 ஓட்டங்களைப் பெற வேண்டியிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஆட்டத்தின் ஓய்வு நாளாகும்.

போதைப் பொருள் பாவிக்கும்

# ஒலிம்பிக் வீரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

மாஸ்கோ, டிச. 2

ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறும் நோக்கில் போதைப் பொருள்களை உபயோகிக்கும் வீரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து அத்தகைய வீரர்களும், அவர்கள் சார்ந்த அமைப்புகளும் முற்றாக வெளியேற்றப்படும் நிலைகூட ஏற்படலாம்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் ஆணைக் குழு கமிட்டிக்கு வழங்கியிருக்கும் பரிந்துரை ஒன்றை அடுத்தே இந்நிலை.

உயர்ந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காக விளையாட்டு வீரர்கள் போதைப் பொருட்களை எல்லை மீறி உபயோகிக்கிறார்கள் என்ற விடயம் அம்பலத்திற்கு வந்திருப்பது தெரிந்ததே.

இத்தகைய போதைப் பொருள்கள் உடல் கூறில் இரசாயனத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

இதன் காரணமாக உடல் தசைகள் கட்டுப்பாடற்று எல்லை மீறிச் செயற்பட்டு, புதிய சாதனைகளைப் படைப்பதற்கு வழி செய்கின்றன.

இதனால் நேர்மையான முறையில் நிலைநாட்டப்பட்ட சாதனைகள் முறியடிக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல.

இந்தப் போதைப் பொருள்களின் தாக்கத்தினால் அதனைப் பாவித்த விளையாட்டு வீரரின் உடல் நிலை சிறிது காலத்தில் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. அவர் போதை வஸ்துகளுக்கு அடிமையாகிவிடுகிறார்.

விளையாட்டு அமைப்பு விதிகளையும், முறைகளையும் குழப்பி, விளையாட்டு வீரர்களின் எதிர்காலத்தைப் பாழடிப்பவை போதைப் பொருள்கள்.

போதைப் பொருள் பாவனைக்குக் கடும் நடவடிக்கை எடுக்க சர்வதேச விளையாட்டு அமைப்புகள் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியினால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழு பின்வரும் பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது.

* போதைப் பொருள் பாவனையால் விளையக் கூடிய ஆபத்துக்கள் குறித்து பயிற்சியாளர்களுக்கும், போட்டியாளர்களுக்கும் தெளிவான விளக்கமளிக்கும் திட்டம் ஒன்றை செயற்படுத்தல்,

* சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடைபெறும் போட்டிகளின் போதும் பயிற்சிகளின் போதும் போதைப் பொருள் பாவனையை அறிவதற்கான கடும் சோதனைகள் நடத்தப்படுவதைக் கட்டாயமாக்குதல்,

* உலக அல்லது ஒலிம்பிக் சாதனைகள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் இச் சோதனைகள் நடைபெறுவதை உறுதி செய்தல்,

* போதைப் பொருள்களை உபயோகிக்கும் போட்டியாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்த அமைப்புகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுத்தல். எதிர் காலத்தில் அத்தகைய வீரர்களும், அமைப்புகளும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதைத் தடை செய்தல்.

## மேற்கிந்தியா வெற்றி

பெஷாவார், டிச. 2

பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் (ஒரு நாள்) ஆட்டத்தில் மேற்கிந்திய அணி வெற்றிபெற்றது.

இத்தொடரின் முதல் ஆட்டத்தில் மேற்கிந்திய அணியும், இரண்டாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றமை தெரிந்ததே.

## இந்தியா வெற்றி

அடிலயிட், டிச. 2

தெற்கு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களினால் நேற்று வெற்றி பெற்றது.

ஓட்ட விபரம்:

தெற்கு ஆஸ்திரேலியா — 135, 435 ஓட்டங்கள். இந்தியா: 245, 8 விக்கெட் இழப்பு 326 ஓட்டங்கள்.

## சரஸ்வதி வித்தியாலயம் முதலிடம்

திருநெல்வேலி, டிச.3

வேலணை கல்வி வட்டார பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தமிழ் தினப் போட்டியில் வேலணை சரஸ்வதி வித்தியாலயம்முதலிடத்தைப் பெற்றது.

போட்டிகள் வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி. திரு. பொன்.கணேசன் தலைமையில் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த - ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீட்ட திகதி 3-12-1985